# கூட்டுறவு

பிப்ரவரி – 2025

## சிறுதானிய உணவு திருவிழா



விலை ரூ. 20

C.C. BANK

நம்பகமான பாதுகாப்பு
நிலையான வளர்ச்சி

(Since 1930)

# சென்னை மத்திய கூட்டுறவு வங்கி

215, பிரகாசம் சாலை, (பிராட்வே), சென்னை-600108.

தொலைபேசி எண் : 044-23458708 to 23458713 பேக்ஸ் :044-25381087

Web : www.ccbankchennai.com Email : ccb_bank@yahoo.co.in

சென்னை மாநகரில் 71 கிளைகள்




- மைய வங்கியியல் சேவையுடன் கூடிய கிளைகள்
- ATM மற்றும் SMS வசதி
- RTGS / NEFT பணப் பரிமாற்ற வசதி
- 54 கிளைகள் குளிர்சாதனம் மற்றும் நவீன வசதிகளுடன்
- சுமார் 10,000 வாடிக்கையாளர்களுக்கு நேரடி சமையல் எரிவாயு மானியம்
- ரூ.500 கோடிக்கும் அதிகமான முதலீடு
- வைப்பீடுகளுக்கு கூடுதல் வட்டி
- ஆயுள்/ பொதுக் காப்பீடு சேவைகள்

**அனைத்துத் தரப்பினருக்குமான கடனுதவிகள்**

- வீடு அடமானக் கடன்கள் / வீட்டுவசதி கடன்கள்
- நகைக் கடன்கள் (பல்வேறு வட்டி விகிதங்களில்)
- மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டியில்லா கடன்கள்
- சிறுவணிகக் கடன்
- சம்பளக் கடன்
- சுய உதவிக் குழுக்களுக்கான கடன்

(IFS Code: TNSC0010500)

# கூட்டுறவு

மலர் : 97 | பிப்ரவரி : 2025 | இதழ் : 11

கூட்டுறவு இயக்க கொள்கை விளக்க இதழ்
எல்லார்க்கும் எல்லாமே என்றே ஞாலம்
இலங்கிடவே கூட்டுறவு ஏற்ற பாதை
இல்லாமை இல்லாத வாழ்வு வேண்டின்
ஏற்றிடுவோம் கூட்டுறவ வெற்றிப் பாதை!

ஆசிரியர் :

முனைவர். க.சொ. இரவிச்சந்திரன்,
M.Sc.,(Agri), M.A.,B.L., H.D.C.M., Ph.D.,,

தொலைபேசி : 044–2836 4864

மின்னஞ்சல் : tncupub03@gmail.com

இணையதளம் : www.tncu.tn.gov.in

ஆயுள் சந்தா ரூ. 2000/–
(பத்தாண்டுகளுக்கு)

ஆண்டு சந்தா ரூ.210/–

தனிப்பிரதி விலை ரூ.20/–

## விளம்பரக் கட்டணம்

பல வண்ணம் (ஓராண்டிற்கு)
அட்டை 4 ஆம் பக்கம் ரூ.50,000/–
அட்டை 2 & 3 ஆம் பக்கம் ரூ.40,000/–

உள்ளே கருப்பு – வெள்ளை
(ஓராண்டிற்கு)
முழுப்பக்கம் ரூ.24,000/–
அரைப்பக்கம் ரூ.12,000/–

உள்ளே கருப்பு – வெள்ளை
(6 மாதங்களுக்கு)
முழுப்பக்கம் ரூ.12,000/–
அரைப்பக்கம் ரூ. 6,000/–

## இந்த இதழில்....

ஆசிரியர் உரை:- வள்ளலார் வழியில் கூட்டுறவு — 5

திண்டுக்கலில் நடைபெற்ற மாநில அளவிலான சிறுதானிய உணவுத் திருவிழா — 10

முதல்வர் மருந்தகம் திட்டம் 24.02.2025 அன்று தொடங்க உள்ளதாக மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தெரிவித்தார். — 18

பெரும் பல நோக்கு கூட்டுறவு சங்கம் (நீலகிரி) — 24

கேட்டதையெல்லாம் கொடுக்கும் மரம் — 39



நாம் உண்ணும் உணவு
நம்முடையதாக இருக்க வேண்டும் ........
உணவு நம்முடையதாக
இருக்கவேண்டுமென்றால்
விதை நம்முடையதாக இருக்கவேண்டும்.
திரு. கோ.நம்மாழ்வார்
(இனி விதைகளே பேராயுதம்)




மாநில அளவிலான சிறுதானிய உணவுத் திருவிழாவினை, மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள் மற்றும் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் திண்டுக்கல் பி.எஸ். என்.ஏ. பொறியியல் கல்லூரியில் 29.01.2025 அன்று துவக்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஆர்.சச்சிதானந்தம், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, இ.ஆ.ப., உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் திரு.த.மோகன், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நிர்வாக இயக்குநர் திரு.ஆ.அண்ணாதுரை, இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் டாக்டர்.ந.சுப்பையன், இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மேலாண்மை இயக்குநர் திரு.சு.பழனிசாமி, இ.ஆ.ப., அரசு அலுவலர்கள், மாணவ, மாணவிகள், மகளிர் சுயஉதவிக்குழுவினர், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்

# வள்ளலார் வழியில் கூட்டுறவு




தமிழகத்தின் தனித்தன்மையான பழம்பெருமை என்பது இம்மண்ணில் வாழ்ந்த முனிவர்கள், ஞானிகள், யோகிகள், துறவிகள், ஆன்றோர்கள், சான்றோர்கள் மற்றும் ஈகையை உயிராக நினைத்து வாழ்ந்த கொடை வள்ளல்கள் ஆகியோர்களால் உருவாக்கப்பட்டது.

அந்த வகையில், இம்மண்ணில் வாழ்ந்த சங்ககால புலவர்கள், திருவள்ளுவர், இளங்கோவடிகள், கம்பர், மூவர் முதலிகள், மாணிக்கவாசகர், ஆழ்வார்கள், நாயன்மார்கள், பட்டினத்தார், தாயுமானவர், வள்ளலார், பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன் உள்ளிட்டவர்களுடைய படைப்புகளே மக்களுக்கு வாழ்க்கை வழிகாட்டி நெறியாக விளங்குகின்றன.

அவர்களில் மனிதர்களையும், அவர்கள் மீது கருணையோடும், இரக்கத்தோடும் சக மனிதர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்று மனிதனுக்கு சுட்டிக் காட்டியவர்கள் திருவள்ளுவர், பட்டினத்தார், வள்ளலார் மற்றும் பாரதியார், பாரதிதாசன் ஆவார்கள். அவர்களுள் அன்பு, இரக்கம் கருணை ஈகை முன்னெடுத்து மனிதனை பாடியவர் வள்ளல் பெருமான்.

"வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே"

என்று ஆன்ம நேயத்தை மையமாக கொண்டு தன்னுடைய கருத்துகளை தெரிவித்த வள்ளலார்தான் தமிழகத்தில் கூட்டுறவு இயக்கம் தோன்றுவதற்கு முன்னோடியாக திகழ்கின்றார். கூட்டுறவுச் சங்கங்களின் கொள்கைகள் எல்லாம் அவர் பாடிய கீழ்கண்ட அருட்பாவில் அமைந்துள்ளன.

"எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்
தம்உயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர்அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம்எனநான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
சிந்தைமிக விழைந்த தாலோ!".

மேற்கண்ட அருட்பா எந்த மனிதரையும் பேதப்படுத்தாமல் எல்லா மனிதர்களும் ஒரு தாய் மக்கள் என்றும் மனிதனுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றன.

இதன் அடிப்படையில், அமைந்த கூட்டுறவுச் சங்கங்களில், அனைவரும் சமம், எல்லோருக்கும் ஒரு சமமான பங்கு என்றும், எல்லோருக்கும் வாக்களிக்கும் உரிமை உண்டு என மேற்கண்ட அருட்பா மூலமாக நாம் கடைபிடிக்கிறோம்.

வள்ளல் பெருமான், இவ்வுலகத்தில் உள்ள அனைவரும் எல்லா வகையான சுகங்களை பெற வேண்டும் என்று கீழ்கண்டவாறு தெரிவிக்கிறார்.

நான்உரைக்கும் வார்த்தைஎலாம் நாயகன்றன் வார்த்தை
நம்புமினோ நமரங்காள் நற்றருணம் இதுவே
வான்உரைத்த மணிமன்றில் நடம்புரிஎம் பெருமான்
வரவெதிர்கொண் டவன்அருளால் வரங்கள்எலாம் பெறவே
தேன்உரைக்கும் உளம்இனிக்க எழுகின்றேன் நீவிர்
தெரிந்தடைந்தென் உடன்எழுமின் சித்திபெறல் ஆகும்
ஏனுரைத்தேன் இரக்கத்தால் எடுத்துரைத்தேன் கண்டீர்
யானடையும் சுகத்தினைநீர் தான்அடைதல் குறித்தே.

எல்லா மனிதர்களும், எல்லா சுகங்களையும் பாகுபாடு இன்றி பெற வேண்டும் என்று அக்காலத்தே வள்ளலார் வலியுறுத்தி **"சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை"** நிறுவினார். அதனுடைய மறுவடிவமாக இன்று கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன.

எல்லா மனிதர்களும் ஒருவர் வாழ்வில் பெற்ற செல்வங்கள், சுகங்கள், நன்மைகள், பாக்கியங்கள், புண்ணியங்கள், யோகங்கள் அனைத்தையும் எல்லோரும் பெற வேண்டும். ஒருவர் மட்டும் பெறுவதனால் அந்த சமூகம் பண்புடைய சமூகமாக ஆகாது என்பதை வலியுறுத்தி வள்ளல் பெருமான் அடைந்த சுகத்தை எல்லோரும் பெற வேண்டும் என்று மனிதர்களை அழைத்தார்.

பாதி இரவில் எழுந்தருளிப்
பாவி யேனை எழுப்பிஅருட்
சோதி அளித்தென் உள்ளகத்தே
சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய்
நீதி நடஞ்செய் பேரின்ப
நிதிநான் பெற்ற நெடும்பேற்றை
ஓதி முடியா தென்போல்இவ்
வுலகம் பெறுதல் வேண்டுவனே.

அந்த வழியில்தான், நம்முடைய முன்னோர்கள் கூட்டுறவுவாளர்கள், அருளாளர்கள், கூட்டுறவு சங்கத்தை தோற்றுவித்து எல்லா மனிதர்களும் எல்லாம் பெற வேண்டும் என்று அதற்கு முன்னோடியாக இருந்த அமைப்புதான் சமரச சுத்த சன்மார்க்க சங்கம். மனிதர்களுக்குள் வேறுபாடு இல்லாமல் மனிதர்கள் சாதி, மதம், இனம், நிறம் இவைகளால் வேறுபாடாமல் இருக்க வேண்டும் என்பதை வள்ளல் பெருமான் கீழ்க்கண்ட திருவருட்பாவில்,

"ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமைஉளர் ஆகிஉல கியல்நடத்தல் வேண்டும்"

என்று தெரிவித்தார். அதனடிப்படையில்தான், கூட்டுறவுச் சங்கங்களில் ஒரே மதிப்புடைய பங்குத் தொகையும், ஒரு வாக்கும் என்ற கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. மேலும், எல்லா வகையான மனிதர்களும் ஒன்று சேர்ந்து அமைக்ககூடிய அமைப்புதான் கூட்டுறவுச் சங்கம். கூட்டுறவுச் சங்கம் ஒரு கடலை போன்று அமைப்பு, காரணம் பல நதிகளை தன்னகத்தே கொண்டது கடல். அதைப்போல பல மனிதர்களை தன்னகத்தே கொண்ட சமத்துவ அமைப்பு கூட்டுறவு சங்கம் அதை வள்ளல் பெருமான் தெரிவித்த

"பொங்குபல சமயமெனும் நதிகளெல்லாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே!"

வறுமையினால், பசியால் வாடிய உயிர்களுக்கு எல்லாம் வாடாமல், வதங்காமல் உயிர் வாழ பல கொடையாளர்களை ஒருங்கிணைத்து வள்ளல் பெருமான் ஏற்படுத்திய அமைப்புதான் **"சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமசாலை"** அச்சாலையின் மூலமாக இன்றும் மனிதர்களுக்கு மட்டுமல்லாது அனைத்து உயிர்களுக்கும் உணவளித்து அவர்கள் உயிரை நிலைபெற செய்ய உதவுகிறது.

உடம்பில் உயிர் தங்குவதற்கு உடம்பு தேவை. அந்த உடம்பை நிலைபெற செய்வதற்கு உணவு தேவை. அந்த உணவை அளிக்க கூடியவர்தான் மனிதரில் பெரும் சக்தி படைத்தவர் என்று வள்ளுவர் தெரிவிக்கிறார்.

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

இந்த மாபெரும் உன்னத கருத்தின் அடிப்படையில் வள்ளல் பெருமான் ஏற்படுத்திய **"சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமசாலை"** கூட்டுறவுத் துறையில் செயல்படுத்தப்படும் பொது விநியோகத்திட்டம் முன்னோடியாக திகழ்கிறது.

தமிழகத்தில் உள்ள 35,000 மேற்பட்ட நியாயவிலைக் கடைகளின் மூலமாக மக்களினுடைய பசிப்பிணியை போக்க கூடிய பொது விநியோகத்திட்டம் வள்ளலாரின் "உயிர் இரக்கம்" சிந்தனையில் விழைந்ததாகும். வள்ளல் பெருமானின் அருட்பாவில்,

"உடம்புவரு வகைஅறியீர் உயிர்வகையை அறியீர்
உடல்பருக்க உண்டுநிதம் உறங்குதற்கே அறிவீர்"

என்ற நிலையில்லாத உயிர் ஒட்டியுள்ள மனிதர்களை பார்த்து கருணையினால் அவர்பால் உள்ள இரக்கம், கருணை, ஈகை இவற்றினால் ஏற்படுத்தப்பட்டுள்ள தருமசாலையின் நீட்சிதான் பொதுநிநியோகத் திட்டம். அத்திட்டத்தின் மூலம் பசியினால் இளைத்த பல கோடி மக்களின் உயிரை நிலைபெற செய்ய தமிழக அரசு எடுத்த நிலைபாடு வள்ளலார் கண்ட மனித குல இரக்கத்தின் மூலமாக எடுக்கப்பட்ட தமிழர்களின் பண்பாடு ஆகும்.

வாழ்க்கையில் பெற்ற சுகங்கள் எல்லாம் வீண்தான், ஆனால் அவை எப்பொழுது அந்த சுகங்கள் இறவாத வரம் பெறும் என்றால் மனிதன் மற்ற மனிதர்களுக்கு உதவி செய்து (Self help through mutual help) அவ்வுயிரையும், தன்னுயிராய் மதிக்கின்ற போது அவை என்றும் நிலை பெறும் என்ற வள்ளல் பெருமான் கருத்தின் அடிப்படையில் மனிதர்கள் கூட்டுறவு அமைப்பில் பணியாற்றுகின்ற போது அவர்கள் மரணமில்லா பெரும் வாழ்வு பெறுவர்.

ஆகவே, கூட்டுறவு அமைப்பு என்றும் இறப்பொழிக்கும் சன்மார்க்க அமைப்பினுடைய மறுவடிவம்தான் என்பதை புரிந்து கூட்டுறவு அமைப்பை இந்த மண்ணில் நிலைபெற செய்ய வேண்டுகிறேன். ❑

–ஆசிரியர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சிவகங்கை மன்னர் துரைச்சிங்கம் அரசு கலைக்கல்லூரி அரங்கில் 22.01.2025 அன்று நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தார். இந்நிகழ்வில், தேவகோட்டை வட்டாரத்தில் சருகணியில் புதியதாக பதிவு செய்யப்பட்ட சருகணி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கான பதிவு சான்றினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களிடம் கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் திரு.கோ. இராஜேந்திர பிரசாத் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள், மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர். கோவி.செழியன் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கார்த்தி ப.சிதம்பரம் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி.ஆ.தமிழரசி ரவிக்குமார் அவர்கள், எஸ். மாங்குடி அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவைர் திருமதி. ஆஷா அஜித், இ.ஆ.ப., அவர்கள், அரசு உயர் அலுவலர்கள், பயனாளிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# சிறுதானிய உணவு திருவிழா



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் மற்றும் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு. அர.சக்கரபாணி அவர்கள் ஆகியோர் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் திண்டுக்கல் பி.எஸ். என்.ஏ. பொறியியல் கல்லூரியில் 29.01.2025 அன்று நடைபெற்ற மாநில அளவிலான சிறுதானிய உணவுத் திருவிழாவில் கலந்து கொண்டு, நுகர்வோர் பாதுகாப்பில் சிறப்பாக பணிபுரிந்த மாவட்டங்களுக்கும், நுகர்வோர் அமைப்புகளுக்கும் பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயங்கள், மாநில அளவில் சிறப்பாகப் பணிபுரிந்த நியாயவிலைக்கடை விற்பனையாளர்கள் மற்றும் எடையாளர்களுக்கு ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ்கள், சிறுதானிய விழிப்புணர்வு குறித்து நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் கேடயங்கள் வழங்கி சிறப்புரையாற்றினர்.

இவ்விழாவில், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப, அவர்கள் தலைமை வகித்தார். திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஆர்.சச்சிதானந்தம் முன்னிலை வகித்தார். திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ. நா.பூங்கொடி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் திரு.த.மோகன், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நிர்வாக இயக்குநர் திரு.ஆ.அண்ணாதுரை, இ.ஆ.ப., அவர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் டாக்டர்.ந.சுப்பையன்,

இ.ஆ.ப., அவர்கள் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மேலாண்மை இயக்குநர் திரு.சு.பழனிசாமி, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் திட்ட விளக்கவுரை ஆற்றினர்.

## மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி அவர்கள் ஆற்றிய உரை:–

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், சிறுதானிய உணவு வகைகளின் பயன்கள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களிடையே சிறுதானிய உணவு வகைகள் பயன்பாட்டை தூண்டும் வகையில் மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் கடந்த 2 ஆண்டுகளாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், திண்டுக்கல் மாவட்டத்தில் சிறுதானிய உணவுத் திருவிழா இன்றைய தினம் நடத்தப்படுகிறது.

இந்த திருவிழாவில் பல்வேறு விதமான சிறுதானிய உணவு வகைகள் பல்வேறு துறைகள் சார்பில் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இதை அனைவரும் பார்த்து, அதன் பயன்களை அறிந்து, நண்பர்களிடம் சொல்லி அவர்களும் அதன் பயன்களை அனுபவிக்க வேண்டும். அதுதான் இந்த திருவிழாவின் மிகப்பெரிய வெற்றியாகும்.

அரசின் திட்டங்களை மக்களுக்கு கொண்டு சென்று, எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் செயல்படுத்தும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்பேரில் முனைப்புடன் செயல்பட்டு வருகிறோம்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிகாலத்தின்போது, நிதிநிலை அறிக்கை தொடர்பாக நடைபெறும் கூட்டத்தில், ஏழை எளிய மக்களின் சாப்பாட்டுக்கு உண்டான நிதியை முதலில் தனியாக ஒதுக்கி வைத்துவிட்டுத்தான் மற்று நிதி ஒதுக்கீடுகளை செய்ய சொல்வார். அந்த வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். பள்ளி குழந்தைகளுக்காக காலை உணவுத் திட்டம், உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மாதம் ரூ.1000/– வழங்கும் புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம் என பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி இந்தியாவிலேயே தலைசிறந்த முதலமைச்சராக திகழ்கிறார்.

தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு சிறந்த மாநிலமாக திகழ்கிறது. தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட வெளிநாட்டு தொழில் நிறுவனங்கள் ஆர்வத்துடன் முன்வருகின்றன. அனைத்து மாவட்டங்களிலும் சிப்காட் கொண்டுவர பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திண்டுக்கல் மாவட்டத்தில் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் விரும்பும்பட்சத்தில் சிப்காட் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வேலைவாய்ப்பை பொறுத்தவரையில் தனியார் துறைகளில் அதிக சம்பளத்துடன் ஏராளமான பணி வாய்ப்புகள் உள்ளன. அதை படித்த இளைஞர்களுக்கு கிடைக்கச் செய்யும் வகையில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த உணவுத்திருவிழாவில் கலந்துகொண்டவர்கள், வந்தோம், பார்த்தோம் என்று இல்லாமல் சிறுதானிய உணவு வகைகள் மற்றும் அதன் பயன்களை அறிந்து தொடர்ந்து பயன்படுத்துவதுடன், உறவினர்கள், நண்பர்களுக்கும் தெரியப்படுத்திட வேண்டும், என மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

## மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் ஆற்றிய உரை:–

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

பொதுமக்களின் ஆரோக்கியத்திற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

சத்துக்கள் நிறைந்த சிறுதானிய உணவு வகைகளை நாம் உண்பதன் காரணமாக நமக்குத் தேவையான ஊட்டச்சத்துகள் கிடைத்து உடல் ஆரோக்கியம் கிடைக்கிறது. சிறுதானிய உணவு வகைகளின் பயன்களை பொதுமக்களிடம் கொண்டு சென்று சேர்க்கும் வகையில் இதுபோன்ற சிறுதானிய உணவுத் திருவிழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.



உணவுப்பழக்க வழக்கங்களை பொறுத்தவரை ஒவ்வொரு நாட்டிற்கும், ஒவ்வொரு மாநிலத்திற்கும் வேறுபடும். தமிழ்நாட்டு உணவுப் பழக்கத்தை பொறுத்தவரை பெரும்பாலும் அரிசி சார்ந்த உணவு வகைகள்தான் பயன்படுத்தப்படுகிறது. சிறுதானிய உணவு வகைகளை எடுத்துக்கொள்வதன் மூலம் பல்வேறு வகையான சத்துக்கள் கிடைப்பது குறித்து



> சத்துக்கள் நிறைந்த சிறுதானிய உணவு வகைகளை நாம் உண்பதன் காரணமாக நமக்குத் தேவையான ஊட்டச்சத்துகள் கிடைத்து உடல் ஆரோக்கியம் கிடைக்கிறது. சிறுதானிய உணவு வகைகளின் பயன்களை பொதுமக்களிடம் கொண்டு சென்று சேர்க்கும் வகையில் இதுபோன்ற சிறுதானிய உணவுத் திருவிழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதுதான் இந்த நிகழ்ச்சியின் நோக்கமாகும். சிறுதானிய உணவு வகைகளின் பயன்களை உலகம் முழுவதும் உள்ள மக்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக 2023–ஆம் ஆண்டை சிறுதானிய உணவு ஆண்டாக அறிவிக்கப்பட்டது. இதன் பயனாக சிறுதானியத்தின் மகத்துவம் உலகம் முழுவதும் உள்ள மக்கள் அறிந்துகொண்டனர்.

அதேபோல் கூட்டுறவின் செயல்பாடுகளை அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் 2025–ஆம் ஆண்டு சுட்டுறவு ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 2.21 கோடி குடும்பங்களுக்கு சேவை செய்யும் துறையாக கூட்டுறவுத்துறை உள்ளது. அதன்காரணமாக சிறப்பாக செயல்பட்ட கூட்டறவு சங்கங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முழுவதும் 37,000 நியாயவிலைக்கடைகள் மூலம் உணவுப்பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. நியாயவிலைக்கடை விற்பனையாளர்கள் மற்றும் எடையாளர்களின் பணியை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பாக செயல்பட்ட விற்பனையாளர்கள் மற்றும் எடையாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகிறது. பொதுவிநியோகத்திட்டத்தை பொறுத்தவரை இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் சிறப்பான சேவை செய்து வருகிறது. தமிழ்நாட்டை போல் மற்ற மாநிலங்களிலும் பொது விநியோகத் திட்டத்தை செயல்படுத்திட மாண்பமை உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

அதேபோல் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு 2வது மாநிலமாக உள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிர்வாகத்திறமையால்தமிழ்நாட்டில்தொழில்வளர்ச்சிமேம்பட்டுள்ளது.



தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றியதோடு மட்டுமின்று, சொல்லாத பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

ஒன்றிய அரசின் நிதி மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு போதிய நிதி வந்து சேராத நிலையில் கூட, மாநில நிதியிலிருந்து அந்த திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி வருகிறார். நிர்வாகத்திறமை மிகுந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பொதுமக்கள் என்றும் உறுதுணையுடன் இருக்க வேண்டும், என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.



**மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் ஆற்றிய உரை:-**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் தமிழகத்தில் ஒரு சிறப்பான ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார். அந்த வகையில்

இந்தியா, தமிழ்நாட்டில் மற்றும் உலகளவில் சிறுதானியங்களை பயன்படுத்த வேண்டும். இதன் மூலமாக நமது உடலுக்கு நல்ல பாதுகாப்பு இருக்கிறது என்பதை உணர்ந்து பொதுமக்கள் சிறுதானியங்களை பயன்படுத்தி வருகிறார்கள்.

2023–ஆம் ஆண்டை ஐக்கியநாடுகள் சபை சிறுதானிய ஆண்டு என்று அறிவித்தது. அதனடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறுதானிய உணவு வகைகள் பயன்பாட்டை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்காக தருமபுரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் அரிசிக்கு பதிலாக 2 கிலோ கேழ்வரகு வழங்க வேண்டும் என்று முடிவு செய்து தற்போது வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக எதிர்வரும் காலங்களில் அரிசிக்கு பதிலாக சிறுதானியங்களை அதிகமாக உட்கொண்டால் உடல் ஆரோக்கியமாக வாழலாம். சிறுதானியங்களை பொதுமக்கள் பயன்படுத்த வேண்டும் என்ற வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பெற்ற பின்பு தமிழகத்தில் உள்ள 2 கோடியே 21 இலட்சம் குடும்ப அட்டை தாரர்களுக்கும் பொது விநியோக திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்த வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

மழை காலங்களில் நெல் நனையக்கூடாது என்பதற்காக, திறந்த வெளியில் சேமிக்கப்பட்ட நெல் குடோன்களை செமி குடோன் மூலமாக சேமிக்க வேண்டும் என்பதற்காக ரூ.4.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செமி குடோன் மூலமாக நெல் சேமிக்கப்பட்டு, அரிசி ஆலைகளில் அரைக்கப்பட்டு மக்களுக்கு தரமான அரிசி வழங்கப்பட்டு வருகிறது. பொதுவிநியோக திட்டத்தின்கீழ் பாமாயில், அரிசி, மண்ணெணைய் போன்ற பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக நெல்லின் ஆதார விலை உயர்த்தப்பட்டுள்ளது. தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு போன்ற மாவட்டங்களில் உள்ள விவசாயிகளிடமிருந்து ராகி நேரடி கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் இம்மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள், என மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

விழாவில் சிறுதானிய உணவுகள் கண்காட்சி நடைபெற்றது. கண்காட்சியில் 40 அரங்குகளில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், பள்ளிக்கல்வித்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் மலைப்பயிர்கள் துறை, திண்டுக்கல் புனித அந்தோணியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆன்டோ கிளப், அமலா கிளப், உணவுப் பாதுகாப்புத் துறை, இந்திய மருத்துவம்

மற்றும் ஹோமியோபதி துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, தொழிலாளர் நலத்துறை, வாஹா நேச்சுரல்ஸ், இந்துஸ்தான், இந்திய தர நிர்ணய அமைவனம். திண்டுக்கல் அனுக்கிரஹா கல்லூரி, திண்டுக்கல் எம்.வி.எம். அரசு மகளிர் கலைக் கல்லூரி, கூட்டுறவுத் துறை, மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தமிழ்நாடு மாநில நகர்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவை சார்பில் கண்காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன.

கண்காட்சியில், கம்பு, கவுனி அரிசி, ராகி, நிலக்கடலை, பாசிப்பயறு, திணை, சாமை, கேழ்வரகு, முருங்கை, எள், உளுந்து, நெல்லிக்காய், பொட்டுக்கடலை, கடலைப்பருப்பு, கொள்ளு, கருப்பு கவுனி, அவள், செவ்வாழை, மல்டி மில்லட், பூண்டு, வரகு அரிசி, சோளம், குதிரைவாலி, தேங்காய், ரவா ஆகிய பொருட்களை பயன்படுத்தி மகளிர் சுயஉதவிக்குழுவினரால் தயாரிக்கப்பட்டிருந்த உணவுப்பொருட்கள் மற்றும் சிறுதானியங்களால் தயாரிக்கப்பட்ட வகை வகையான உணவு பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன், அனைவருக்கும் வழங்கப்பட்டது. ▣

*இவ்விழாவில், நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ச.உமா, இ.ஆ.ப., திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். கா.ப.கார்த்திகேயன், இ.ஆ.ப., கரூர் மாவட்ட ஆட்சி˙தலைவர் திரு.மீ. தங்கவேல் இ.ஆ.ப., வேடசந்துார் சட்டமன்ற உறுப்பினர், திரு.ச.காந்திராஜன், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி இளமதி ஜோதிபிரகாஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, கூட்டுறவுச் சங்கங்கள் இணைப்பதிவாளர் திரு.சி. குருமூர்த்தி, திண்டுக்கல் மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் மற்றும் செயலாட்சியர் திருமதி இரா.சுபாஷினி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் திரு.சா.சதீஸ்பாபு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மாவட்ட திட்ட அலுவலர் திருமதி ச. பூங்கொடி, தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மையம் மாநில இணைச் செயலாளர் திரு.எஸ்.பி.சுப்பிரமணியம், திண்டுக்கல் மாவட்ட நுகர்வோர் உரிமை பாதுகாப்புச் சங்கம் மாவட்டத் தலைவர் திரு.எஸ்.எஸ். சுரேஷ்குமார், அரசு அலுவலர்கள், மாணவ, மாணவிகள், மகளிர் சுயஉதவிக்குழுவினர், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்*



திண்டுக்கல் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைக்கு புதிதாக கட்டப்பட்ட அபிராமி கூட்டுறவு சிறப்பங்காடியினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் ஆகியோர் 29.01.2024 அன்று திறந்து வைத்தனர்.

இவ்விழாவில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு கூடுதல் தலைமை செயலர், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர், கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டார்கள்.



# முதல்வர் மருந்தகம் திட்டம் 24.02.2025 அன்று தொடக்கம்

## மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

**முதல்வர் மருந்தகம் திட்டம்** 24.02.2025 அன்று தொடங்க உள்ளதாக மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகத்தில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.ெரியகருப்பன் அவர்கள் தலைமையில், முதல்வர் மருந்தகம் திறப்பு விழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் 17.02.2025 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலர் திரு.சத்யபிரத சாகு, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள் பேசியதாவது:

முதல்வர் மருந்தகம் திட்டத்தின்கீழ், 980 மருந்தகங்களுக்கு அனைத்து தகுதிகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மருந்தகங்களின் பணிகளும் விரைவில் முடியும். முதல்வர் மருந்தகம் திட்டத்தைப் பொறுத்தவரை மருந்தகங்களைத் திறப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயாராக உள்ளன.

முதல்வர் மருத்தகத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பிப்ரவரி 24ஆம்தேதி திறக்க உள்ளார்.

அவரது நேரடி கண்காணிப்பில் இந்த மருந்தகங்கள் செயல்படவுள்ளன. 1,000 மருந்தகங்கள்: கூட்டுறவு சங்கங்கள் மூலம் 500, தொழில் முனைவோர் மூலம் 500 என 1,000 முதல்வர் மருந்தகங்கள் திறக்கப்பட உள்ளன.

புதிதாக முதல்வர் மருத்தகம் திறக்கும் தொழில் முனைவோர்க்கு ரூ. 3 லட்சம் வரை அரசு மானியம் வழங்கும். மக்கள் நல்வாழ்வுத்துறை மூலம் மருந்துகள் கொள்முதல் செய்யப்படும்.

தேவை ஏற்பட்டால் வெளிச்சந்தையிலும் மருந்துகள் கொள்முதல் செய்யப்படும். பிரதமர் மருந்தகம் உள்பட எந்த மருந்தகங்களிலும்

**கூட்டுறவு சங்கங்கள் மூலம் 500, தொழில் முனைவோர் மூலம் 500 என 1,000 முதல்வர் மருந்தகங்கள் திறக்கப்பட உள்ளன.**






*மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தலைமையில், 17.02.2025 அன்று தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகத்தில், முதல்வர் மருந்தகம் திறப்பு விழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலர் திரு. சத்யபிரத சாகு, இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.க.நந்தகுமார், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்(நுகர்வோர் பணிகள்) திரு.அம்ரித், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் மற்றும் இணைப்பதிவாளர்கள் கலந்து கொண்டனர்.*

இல்லாத விதமாக மலிவான விலையில் தரமான மருந்துகள் வழங்கப்படும்.

மக்கள் தொகை, மருந்துப்பயன்பாடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில் முதல்வர் மருந்தகங்கள் அமையவுள்ளன. அதன்படி மதுரையில் 52, கடலூரில் 49, கோவையில் 42, தஞ்சையில் 40, சென்னையில் 37 முதல்வர் மருந்தகங்கள் அமையவுள்ளன என தெரிவித்தார். ❑



இராமநாத புரம் மாவட்டத்தில் தொடங்கிய தயாராக உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களால் நடத்தப்பட இருக்கின்ற முதல்வர் மருந்தககங்களையும் ஆய்வு செய்ய கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல்பதிவாளர் / மாமண்டல அலுவலர் திரு. பாபு அவர்கள் 30.01.2025 அன்று ஆய்வு மேற்கொண்டார்





கள்ளக்குறிச்சி மாவட்டம் கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் திரு.எஸ்.பி.முருகேசன் அவர்கள் தலைமையில் கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர்களுக்கு கணினியில் பதிவேற்றும் செய்தல் தொடர்பாக ஆய்வு கூட்டம் 20.01.2025 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் கள்ளக்குறிச்சி சரக துணைப்பதிவாளர் மண்டல இணைப்பதிவாளர் அலுவலக கண்காணிப்பாளர் மற்றும் கள அலுவலர்கள் செயலாளர்கள் கலந்து கொண்டனர்




கூட்டுறவே! **இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,** நாட்டுயர்வு!!

தபால் பெட்டி எண்.25, 265, E, வண்டிக்கார தெரு. இராமநாதபுரம்-623501.

✆ : 04567-221245 rdccbank@gmail.com www.rdccbankco.in

**தலைமையகம் உட்பட மாவட்டம் முழுவதும் 32 கிளைகளுடன் வாடிக்கையாளர் சேவையில் 104வது ஆண்டில் செயல்பட்டு வருகிறது.**

**இட்டு வைப்புகளுக்கான வட்டி விகிதம்**

| வ. எண். | விபரம் | சாதாரண மக்களுக்கு | மூத்த குடிமக்கள் |
|---|---|---|---|
| 1. | 31 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 5.50% | 5.50% |
| 2. | 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 5.85% | 5.85% |
| 3. | 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 6.30% | 6.30% |
| 4. | 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 6.85% | 6.85% |
| 5. | 1 வருடத்திற்கு | 8.00% | 8.25% |
| 6. | மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரு வருடத்திற்கு | 8.25% | 8.50% |

நிறுவனங்கள் / கூட்டுறவு சங்கங்கள் மூலம் பெறப்படும் பெரு இட்டு வைப்புகளுக்கு (Bulk Deposit) 1 வருடத்திற்கு ரூ. 5.00 கோடி மற்றும் அதற்கு மேல் 8.50% வட்டி வழங்கப்படுகிறது.

**கடன் வசதிகள்**

❁ குறைந்த வட்டியில் தனி நபர் நகைக்கடன் ❁ மகளிர் சுயஉதவிக்குழுக்கடன் ❁ மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டியில்லாக் கடன் ❁ நெசவாளர்களுக்கு மானியத்துடன் கூடிய முத்ரா கடன் ❁ ஆதரவற்ற விதவைகளுக்கு குறைந்த வட்டியில் கடன் ❁ வீடு கட்டும் மற்றும் வீட்டு அடமானக் கடன் (குறைந்த வட்டியில்) ❁ சிறுவணிகக்கடன், பணிபுரியும் மகளிர் கடன்

**வங்கிச் சேவைகள்**

❁ தனிநபர் பாதுகாப்பு பெட்டக வசதி ❁ விரைவு பண பரிவர்த்தனை சேவை (NEFT & RTGS) ❁ ATM மற்றும் நடமாடும் ATM வசதி ❁ Mobile Banking ❁ விவசாயிகளுக்கு KCC Rupay Card, POS மற்றும் Micro ATM மூலம் பணம் பட்டுவாடா வசதி ❁ LPG Gas சமையல் எரிவாயு மானியம் பெறும் வசதி ❁ தனிநபர் பாதுகாப்பு பெட்டக வசதி ❁ G Pay, Phone Pay, PayTM, UPI, IMPS, AEPS

**பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீம யோஜனா (PMJBY) காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது**

இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்




கோயம்புத்தூர் மாவட்டத்தில், இடையபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் சிறப்பு கூட்டுறவு உறுப்பினர் கல்வி திட்ட முகாம் 04.02.2025 அன்று நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில், சங்கத்தின் செயலாளர், சுல்தான்பேட்டை வட்டாரகள அலுவலர், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேற்பார்வையாளர் மற்றும் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.






சேமிக்க சிறந்த வங்கி ! 100 ஆண்டு பாரம்பரியமிக்க வங்கி !!

# புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,

## புதுக்கோட்டை

அன்புடையீர் !

புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் 28 கிளைகளுடன் 104 ஆண்டுகளை கடந்து மக்கள் சேவை புரிந்து வருகிறது.

### எங்களது சிறப்பம்சங்கள்:-

★ மைய வங்கியியல் சேவை ★ UPI சேவை. ★ துரித பணப்பரிமாற்ற சேவை (RTGS/NEFT/IMPS)
★ ATM சேவை (ATM Debit Card / KCC Card) ★ குறுந்தகவல் சேவை (SMS)
★ செல்லிடை வங்கிச் சேவை (Mobile Banking) ★ தனிநபர் பாதுகாப்பு பெட்டக (Locker) வசதி
★ அரசின் அனைத்து மானியங்களும் பெறும் இணையதள வசதி.
★ அடமான நகைகளுக்கு முழு பாதுகாப்பு மற்றும் காப்பீடு வசதி

கிராம் ஒன்றுக்கு ரூ.5,000/-

### விரைவு நகைக்கடன் சேவை

➤ ஒரு நபருக்கு 30.00 இலட்சம் வரை மிகக்குறைந்த வட்டி விகிதம்.
➤ மிகக்குறைந்த நகை பரிசீலனை கட்டணம்.
➤ கூட்டு வட்டி கிடையாது.
➤ அனைத்து வேலைநாட்களிலும் நகைக்கடன் வழங்கப்படுகிறது.
➤ தங்க நகைகளுக்கு முழு பாதுகாப்பு மற்றும் காப்பீடு வசதி.



### மிகக்குறைந்த சாதாரண வட்டியில் கடன்பெற

வீட்டு அடமான கடன் அதிகபட்சமாக ரூ.20.00 இலட்சம் வரை



புதிய வீடு கட்ட குறைந்த வட்டியில் ரூ.75.00 இலட்சம் வரை

எந்தவித மறைமுக கட்டணம் இல்லை... கடன் சலுகை சாதாரண வட்டி.

தவணைக்காலம் 50 வாரங்கள் | சிறு வணிகக் கடன் உயர்ந்தபட்சமாக கடன் தொகை ரூ.1,00,000 வரை | தகுதியுடையவர்கள் : பூ கடை, பழக்கடை, காய்கறி கடை, பெட்டிக்கடை, மளிகைக்கடை, மீன்கடை, துணி வியாபாரம்.

### கடன் சேவைகள்

- நகைக்கடன் • தனிநபர் சிறு வணிகக்கடன்
- சுய உதவிக்குழு கடன் • டாம்கோ கடன்
- டாப்செட்கோ கடன் • மாற்றுத்திறனாளிகள் கடன்
- தனிநபர் சம்பள கடன் • மகளிர் தொழில் முனைவோர் கடன்
- பணிபுரியும் மகளிர் கடன் • பண்ணை சாரா கடன்
- வீடு கட்டும் கடன் • வீட்டு அடமானக் கடன்
- கைம்பெண்கள் (ம) கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன்
- வேளாண் (ம) ஊரக வளர்ச்சிக்காக விவசாயிகளுக்கு 0% வட்டியில் பயிர்க்கடன் மற்றும் குறைந்த வட்டியில் மத்திய கால கடன்கள்.

### நிரந்தர வைப்புக்கு வட்டி விகிதம்

| காலம் | பொது | மூத்த குடிமக்கள் |
|---|---|---|
| 7 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.00% | 4.00% |
| 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 4.50% | 4.50% |
| 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 5.00% | 5.00% |
| 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 6.50% | 7.00% |
| 1 வருடம் முதல் 3 வருடம் வரை | 8.00% | 8.25% |
| 3 வருடத்திற்கு மேல் | 8.00% | 8.25% |

### சிறப்பு திட்டங்கள்

☞ பயிர் காப்பீட்டுத் திட்டம் (PMFBY)
☞ பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா திட்டம் (PMSBY)
☞ பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா திட்டம் (PMJJBY)

### வணிக வங்கிகளுக்கு இணையான டிஜிட்டல் வசதிகள் கொண்ட வங்கி

UPI PAYMENTS

NEFT & RTGS

Mobile Banking → IMPS

MICRO ATM

வங்கியின் சேவைகள் ! உங்கள் கையில் !!

வாடிக்கையாளர்கள் டிஜிட்டல் சேவையை பயன்படுத்தி கொள்ளவும்.

வங்கியில் முதலீடு செய்துள்ள வைப்புகளுக்கு DICGC நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களின் நேசமிகு துரித சேவையே வங்கியின் நோக்கம்

இன்றே அணுகுவீர்! வங்கியின் தலைமை அலுவலகம் மற்றும் 27 கிளைகள்

# பெரும் பல நோக்கு கூட்டுறவு சங்கம் (நீலகிரி)



நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் கீழ் 03 பெரும் பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகிறது. இச்சங்கங்களின் முக்கிய நோக்கம் பழங்குடியின மக்களின் வாழ்வாதரத்தை முன்னேற்ற வேண்டும் என்பதாகும்.

- மசினகுடி மலைவாழ் மக்கள் பெரும் பல நோக்கு கூட்டுறவு சங்கம்.
- பந்தலூர் வட்டம் தொல் பழங்குடியினர் பெரும் பல நோக்கு கூட்டுறவு சங்கம்
- கோத்தகிரி வட்டம் மலைவாழ் பழங்குடியினர் பெரும் பல நோக்கு கூட்டுறவு சங்கம்.

**1. மசினகுடி மலைவாழ் மக்கள் பெரும் பல நோக்கு கூட்டுறவு சங்கம்.**

இச்சங்கம் உதகை மற்றும் கூடலூர் வட்டம் முழுவதும் செயல் எல்லையாக கொண்டு செயல்பட்டு வருகிறது.

- இச்சங்கத்தில் இருளர், குறும்பரர், காட்டு நாயக்கர் மற்றும் பனியர் ஆகிய பழங்குடியினர்/நாளது தேதியில் 4182 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.
- சிறு வனப் பொருட்கள் வரங்குதல் மற்றும் விற்பனை செய்தல்
- இச்சங்கத்தில் தேன், இலவம்பஞ்சு மற்றும் புளி ஆதிய




வணப்பொருட்கள் உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு பொது மக்களுக்கு நியாயமான விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

2. **பந்தலூர் வட்டம் தொல் பழங்குடியினர் பெரும்பல நோக்கு கூட்டுறவு சங்கம்.**

- இச்சங்கம் பந்தலூர் வட்டம் முழுவதும் செயல் எல்லையாக கொண்டு செயல்பட்டு வருகிறது.
- இச்சங்கத்தில் பனியர், காட்டுநாயக்கர் மற்றும் மல்லகுறும்பர் ஆகிய பழங்குடியினர் நாளது தேதியில் 819 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.
- சிறு வனப் பொருட்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் இச்சங்கத்தின் உறுப்பினர்கள் மூலம் கலப்படமற்ற தேன் கொள்முதல் செய்து பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
- விவசாயிகள் விளைப் பொருட்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் இச்சங்கத்தில் காப்பி மற்றும் குருமிளகு போன்ற விவசாய விளை பொருட்கள் அன்றைய சந்தை மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்டு பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

3. **கோத்தகிரி வட்டம் மலைவாழ் பழங்குடியினர் பெரும்பல நோக்கு கூட்டுறவு சங்கம்**

- இச்சங்கம் கோத்தகிரி மற்றும் குன்னூர் வட்டம் முழுவதும் செயல் எல்லையாக கொண்டு செயல்பட்டு வருகிறது.
- இச்சங்கத்தில் கோத்தர், இருளர், தோடர் ஆகிய பழங்குடியினர் நாளது தேதியில் 1,570 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.



☛ சிறு வனப் பொருட்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் இச்சங்கத்தில் தேன், சீமார்புல், கடுக்காய் மற்றும் இலவம்பஞ்சு ஆகிய வனப்பொருட்கள் உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு பொது மக்களுக்கு நியாயமான விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## ❁ உறுப்பினர்கள்

பெரும் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் ஏ மற்றும் பி வகுப்பு உறுப்பினர்கள் சேர்க்கப்படுகின்றனர். இதில் ஏ வகுப்பு உறுப்பினர்களுக்கு சங்கத்தில் வாக்களிக்க உரிமை உண்டு பி வகுப்பு உறுப்பினர்கள் இணை உறுப்பினராக சங்கத்தால் வழங்கப்படும் சில சேவைகளை மட்டும் பெறுவதற்காக சேர்க்கப்படுகின்றனர்.

## ❁ சங்க உறுப்பினராவதற்கான தகுதிகள்

1. பழங்குடியினராக இருக்க வேண்டும். (சாதிச் சான்று கட்டாயம்)
2. சங்க விவகார எல்லையில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
3. 18 வயது பூர்த்தியடைந்தவராக இருக்க வேண்டும்.
4. மன ஆரோக்கியம் உடையவராக இருக்க வேண்டும்.

## ❁ சங்கத்தின் நிதி ஆதாரங்கள்

**1. பங்கு தொகை**

சங்க உறுப்பினர்களால் அளிக்கப்படும் பங்கு தொகை.

**2. வைப்புகள்**

உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து கீழ்கண்ட வைப்புகள் திரட்டப்படுகிறது.

அ. சேமிப்பு கணக்கு

ஆ. நிரந்தர வைப்பு

இ. தொடர் வைப்பு

3. அரசு பங்கு தொகை

**4. மத்திய கூட்டுறவு வங்கியிடமிருந்து பெறப்படும் கடன்கள்**

**சங்கம் மூலம் வழங்கப்படும் கடன்கள்**

1. விவசாய பயிர்க்கடன்

விவசாய பயிர் கடன் நபர் ஒருவருக்கு, 1 நபர் ஜாமின் அடிப்படையில் ரூ 1,60,000 இலட்சம் வரையும் அதற்கு மேல் நில அடமானத்தின்

பேரில் அதிகபட்சம் ரூ.3,00,000 இலட்சம் வரையும் கடன் வழங்கப்படுகிறது.



விவசாய கடன் பெறும் விவசாயிகள் தாங்கள் பெற்ற கடனை ஒரு வருட காலத்திற்குள் வட்டியில்லாமல் திருப்பி செலுத்தலாம். கடனை திருப்பி செலுத்த தவறும் பட்சத்தில் ஒரு வருடத்திற்கு மேல் 7 சதவீதம் வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டும்.

2. விவசாய நகைக்கடன் (KCC JL)

விவசாய நகைக்கடன் நபர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூ. 3,00,000 இலட்சம் வரை நகை அடமானத்தின் பேரில் கடன் வழங்கப்படுகிறது.



விவசாய நகைக்கடன் பெறும் விவசாயிகள் தாங்கள் பெற்ற கடனை ஒரு வருட காலத்திற்குள் வட்டியில்லாமல் திருப்பி செலுத்தலாம். கடனை திருப்பி செலுத்த தவறும்பட்சத்தில் ஒரு வருடத்திற்கு மேல் 7 சதவீதம் வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டும்.


3. கூட்டு பொறுப்புக் குழு கடன் (JLG)

குறைந்த பட்சம் 5 நபர் கொண்டு குழு அமைத்து விவசாய கூட்டு பொறுப்புக் கடன் பெறலாம். ஒவ்வொரு நபரும் குத்தகை பயிரிடுவது சம்பந்தமாக குத்தகை ஒப்பந்த பத்திரம் பெற்று சமர்ப்பித்து கடன் பெறலாம்.



குத்தகை அளிப்பவரின் நிலம் தொடர்பான ஆவனம். மேலும் குழு சம்பந்தமாக உறுப்பினர்கள் கூட்டாகவும், தனித்தனியாகவும் பொறுப்பேற்று கூட்டு பொறுப்பு குழு தீர்மான நகல் ஏற்று சங்கத்திற்கு கொடுக்கப்பட வேண்டும் கூட்டுறப் பொறுப்புக் குழு கடன் அதிக பட்ச குழு ஒன்றிற்கு ரூ. 3,00,000 வரை வழங்கப்படுகிறது.

கூட்டுபொறுப்பு குழு கடன் பெறும் விவசாயிகள் தாங்கள் பெற்ற


துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் (வரை)
THE TUDIYALUR CO-OPERATIVE AGRICULTURAL SERVICES LIMITED. NO. K. 1550
டியூகாஸ் பூச்சிக்கொல்லி மருந்துகள்
கோவை விதைகள்
ஒரே கூரையின் கீழ் அனைத்து இடுபொருட்களும்
TUCAS
வங்கிப் பணிகள்
அசோகா மார்க் கலப்பு உரங்கள் பயன்படுத்திய பயிர்கள்
அசோகா மார்க் கலப்பு உரங்கள்
Tudiyalur Post, Coimbatore - 641 034, TAMILNADU, INDIA
Phone : +91 0422 2642322, +91 0422-2642722, Fax: +91 0422-2642833
Email : tucas_1955@yahoo.co.in, info@tucas.org
Website : www.tucas.org

கடனை ஒரு வருட காலத்திற்குள் வட்டியில்லாமல் திருப்பி செலுத்தலாம். கடனை திருப்பி செலுத்த தவறும் பட்சத்தில் ஒரு வருடத்திற்கு மேல் 7 சதவீதம் வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டும்.

4. **கால்நடை பராமரிப்பு கடன் (KCC AH)**



பயிர்கடன் திட்டத்தின் கீழ் விவசாய சாகுபடி செய்யும் உறுப்பினர்கள் கால்நடை பராமரிப்பதற்காக கடன் வழங்கப்பட்டு வருகிறது.

கால்நடை பராமரிப்பு கடன் (KCC AH) 2 மாடுகளுக்கு, ரூ. 28, 000 வரை கடன் வழங்கப்படுகிறது. மேலும் ஆடுகள் மற்றும் கோழிகள் பராமரிப்பதற்கும் கடன் வழங்கப்படுகிறது. கால்நடை பராமரிப்பு கடன் (KCC AH) தாங்கள் பெற்ற கடனை ஒரு வருட காலத்திற்குள் வட்டியில்லாமல் திருப்பி செலுத்தலாம். கடனை திருப்பி செலுத்த தவறும் பட்சத்தில் ஒரு வருடத்திற்கு மேல் 7 சதவீதம் வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டும்.

5 மகளிர் சுய உதவிக்குழு கடன் (SHG)

மகளிர் சுய உதவிக்குழு கடன் SHG அதிக பட்ச கடன் தொகை (குழு ஒன்றிற்கு) ரூ. 20,00,000 வரை கடன் வழங்கப்படுகிறது. மகளிர் சுய உதவிக்குழு கடன் SHG 36 சம தவணையில் 10.50 சதவீதம் வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டும்.



**(உரிய காலத்திற்குள் அசலும் வட்டியும் சங்கத்திற்கு திருப்பி செலுத்தினால் வட்டி மட்டும் மானியமாக அரசிடமிருந்து பெற்று திருப்பி வழங்கப்படும்)**

**6. நகைக்கடன் (பொது)**



அதிகபட்ச கடன் தொகை நகைக்கடன் (பொது) ஒரு நபருக்கு ரூ. 20,00,000 வரை கடன் வழங்கப்படுகிறது. நகைக்கடன் (பொது) ஒரு வருட காலத்திற்குள் தற்போது சிறப்பு திட்டத்தின் கீழ் 8.5 சதவீதம் வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டும்.

**7. மாற்றுத் திறனாளிகள் கடன் (NHFDC)**



திட்ட அறிக்கை (Project Report prepared by C.A) ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட கடன்களுக்கு மட்டும்மாற்றுத் திறனாளிகள் கடன் (NHFDC)ஒரு நபருக்கு அதிகபட்ச ரூ. 5,00,000 வரை கடன் வழங்கப்படுகிறது.

மாற்றுத் திறனாளிகள் கடன் (NHFDC) தாங்கள் பெற்ற கடனில் 60 மாதங்கள் 5 சதவீதம் வட்டியுடன் கடனை திருப்பி செலுத்த வேண்டும்.

**(உரிய காலத்திற்குள் அசலும் வட்டியும் சங்கத்திற்கு திருப்பி செலுத்தினால் வட்டி மட்டும் மானியமாக அரசிடமிருந்து பெற்று திருப்பி வழங்கப்படும்)**

**8. வைப்புகள் மீதான கடன்**



வைப்பு தொகையில் 85 சதவீதம் வரை வைப்புகள் மீதான கடனாக வழங்கப்படுகிறது. வைப்புகள் முதிர்வு தேதிக்குள் வைப்புகளுக்கு வழங்கப்படும் வட்டியுடன் கூடுதலாக 2 சதவீதம் வட்டியுடன் கடனை திருப்பி செலுத்த வேண்டும்.

**ஆ. மத்திய காலக் கடன்கள்**

**1. கறவை மாட்டுக் கடன்**



கறவை மாட்டுக் கடன் ஒரு (1) மாட்டுக்கு ரூ. 50,000 இரண்டு (2) பாட்டுக்கு அதிகபட்சம் ரூ. 1,00,000 வரை கடன் வழங்கப்படுகிறது. கறவை மாட்டுக் கடன் தாங்கள் பெற்றகடனில் 36 சம தவணையில் வட்டியுடன் 12 சதவீதம் வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டும் **(உரிய காலத்திற்குள் அசலும் வட்டியும் சங்கத்திற்கு திருப்பி செலுத்தினால் வட்டி மட்டும் மானியமாக அரசிடமிருந்து பெற்று திருப்பி வழங்கப்படும்)**

**2. சிறு வணிகக் கடன்**



சிறு வணிகக் கடன் ஒரு நபருக்கு அதிக பட்சம் ரூ. 50,000 வரை கடன் வழங்கப்படுகிறது. சிறு வணிகக் கடன் தாங்கள் பெற்ற கடனில் 365 நாட்கள் 12 சதவீதம் வட்டியுடன் கடனை திருப்பி செலுத்த வேண்டும்.

**இதர சேவைகள்**

1. மினி சூப்பர் மார்க்கெட்

மசினகுடி மலைவாழ் மக்கள் பெரும் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் சங்க உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய மளிகை பொருட்கள் குறைந்த விலையில் தரமான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

2.பொதுச் சேவை மையம் (இ சேவை)

மசினகுடி மலைவாழ் மக்கள் பெரும் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு வருவாய் துறை மூலம் வழங்கப்படும் இருப்பிட சான்றிதழ், ஜாதி சான்றிதழ், வருமானச் சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ் போன்ற 21 சான்றிதழ்கள், குடும்ப அட்டை (Smart Card) புதிதாக விண்ணப்பித்தல், குடும்ப அட்டையில் (Smart Card) பெயர் சேர்த்தல் / நீக்கம், மின் கட்டணம் செலுத்துதல் போன்ற பல்வேறு வகையான மின்னனு சேவைகளை அளிக்கும் நோக்கத்துடன் பொதுச் சேவை மையம் அமைக்கப்பட்டு பொது மக்களுக்கு சேவை செய்து வருகிறது.❑

# மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,



187, வடக்கு வெளி வீதி, மதுரை - 625 001.

தொலைபேசி எண் : 0452 - 2342051 முதல் 2342054 Fax : 0452 - 2345747

mdccbank@rocketmail.com, Post Box No. : 14

E-mail : mdccbank@rocketmail.com

## மக்கள் சேவையில் 112 ஆண்டுகள்

மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் தலைமை அலுவலகம் மற்றும் 45 கிளைகளுடன் பொது மக்களின் பேராதரவால் ஒரு நூற்றாண்டைக் கடந்து சீரும் சிறப்புடன் செயல்பட்டு சேவை செய்து வருகின்றது

வங்கியின் வைப்புத் தொகை : ரூ. 169131.52 இலட்சம்

வங்கி வழங்கியுள்ள கடன் தொகை : ரூ. 241767.32 இலட்சம்

### வாடிக்கையாளர்களின் வைப்புத் தொகைகளுக்கு வங்கி வழங்கும் வட்டி விகிதம்

| | |
|---|---|
| சேமிப்பு கணக்கு (தினசரி நிலுவைக்கு) | 3.00% |
| கால வைப்புகள் | |
| 7 நாட்கள் முதல் 14 நாட்கள் வரை | 3.00% |
| 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.50% |
| 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 5.50% |
| 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 6.50% |
| 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 7.00% |
| 12 மாதங்கள் முதல் அதற்கு மேலும் | 7.50% |

60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் இட்டு வைக்கும் வைப்புகளுக்கு 0.50% கூடுதல் வட்டி வழங்கப்படுகிறது.

### தலைமை அலுவலகம் மற்றும் வங்கி கிளைகள் மூலம் வழங்கப்படும் கடன்கள்

* தனி நபருக்கு ரூ. 30.00 இலட்சம் வரை மிகக் குறைந்த வட்டியில் நகைக்கடன்
* புதிதாக வீடு கட்டுவதற்கான கடன் மற்றும் வீட்டு அடமானத்தின் பேரில் அடமானக் கடன்
* தொழில் முனைவோருக்கான கடன்
* சிறு வணிகக் கடன் மற்றும் சிறு வணிக கூட்டுப்பொறுப்புக் குழுக் கடன்
* விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த கடன்கள்
* மகளிர் சுய உதவிக் குழுக் கடன்
* பணிபுரியும் மகளிருக்கு கடன்
* கிளைகள் மூலம் மத்திய கால முதலீட்டுக் கடன்
* மாற்றுத்திறனாளிகளுக்கான கடன்
* MSME சிறுத் தொழில் உரிமையாளர்கள் / பங்குதாரர் நிறுவனங்கள்/ கம்பெனிகள் மற்றும் கூட்டுக் குழுக்களுக்குக் கடன்

இது போன்ற பலவகையான கடன்கள் வழங்கப்படுகின்றது. மேலும் விபரங்கள் தெரிந்து கொள்ள மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலகம் மற்றும் 45 கிளைகளை தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்கிறோம்.

**மேலும் வாடிக்கையாளர்களுக்கு**

* குறைந்த வாடகையில் பாதுகாப்பு பெட்டக வசதி
* ATM (தானியங்கி பணம் கொடுக்கும் இயந்திரம்) வசதி
* RTGS & NEFT வசதி உள்ளது.
* அலைபேசி வங்கியியல் சேவை (Mobile Banking Service)
* விரைவில் இணையதள வங்கி சேவை (Net Banking Facility)

**செயல்பாட்டில் உள்ள வங்கியின் புதிய திட்டம்**

சிறுவர் / சிறுமியர்களுக்கான கண்மணி சேமிப்பு திட்டம். இத்திட்டத்திற்கு சாதாரண சேமிப்புக்கு வழங்கப்படும் வட்டியைக் காட்டிலும் கூடுதலாக 1% சேர்த்து 4% வட்டி வழங்கப்படும்.

**"இன்றைய சேமிப்பு ! நாளைய பாதுகாப்பு"**

**"கூட்டுறவு வங்கியில் சேமிப்பீர் வாழ்வை வளமாக்குவீர்"**

இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்

"எம்மொழிக்கும் சளைத்ததல்ல எம் மொழி! இலக்கியங்களில் புதைந்திருந்த வரலாற்றினை மண்ணில் அகழாய்ந்து நிறுவி வருகிறோம்! அகத்திலும் புறத்திலும் அன்பும் வீரமும் கொண்டு வாழும் நற்றமிழர் தாய்மொழி, போற்றுதலுக்குரிய பழமை உடைய மொழி மட்டுமல்ல; பிறமொழித் துணையின்றித் தனித்து இயங்கும் ஆற்றல்கொண்ட செம்மொழி! உலகெங்கும் பரவட்டும் நம் உயர்தனிச் செம்மொழி!"

–மாண்புமிகு முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின்
(X வலைதள பகிர்வு)




இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்தபோது, பாகிஸ்தானுடன் இணைக்கப்பட்டது பங்களாதேஷ். 1948இல், அப்போதைய ஜின்னா தலைமையிலான அரசு, உருது மொழியை பாகிஸ்தானின் ஒற்றை ஆட்சி மொழியாக மாற்ற திட்டமிட்டது.

கல்வி தேர்வில் இருந்த வங்கமொழியை பாடத்திட்டத்திலிருந்து நீக்கியது. இதற்கு கிழக்கு பாகிஸ்தான், அதாவது பங்களாதேஷ், கடும் எதிர்ப்பு தெரிவித்தது. டாக்கா பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டங்களைத் தொடங்கினர். இந்த போராட்டம் பின்னர் வன்முறையாக மாறியது. 1952 பிப்ரவரி 21ஆம் தேதி டாக்கா பல்கலைக்கழக மற்றும் மருத்துவ கல்லூரி மாணவர்களின் போராட்டத்தில், அரசு நிகழ்த்திய துப்பாக்கிச் சூட்டில் நான்கு மாணவர்கள் உயிரிழந்தனர். வங்கமொழிக்காக உயிர் நீத்த தியாகிகளின் நினைவாகவே ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 21ஆம் தேதியை, உலக தாய் மொழி தினமாக 1999இல் யுனெஸ்கோ அறிவித்தது.

அமோக விளைச்சலை அள்ளித்தருமே
**கிரிப்கோ குருணை யூரியா**

UREA | BIO-FERTILISER | SEED




**கிரிஷக் பாரதி கோவாப்பரேட்டிவ் லிமிட்டெட்.,**

KRIBHCO

அறை எண். 1, 2 & 3, ஆயத்த ஆடை வளாகம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.

t
கூட்டுறவே! நாட்டுயர்வு!

# சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

செரி ரோடு, சேலம் –630001, தொலைபேசி எண்: 0427–2451761–765
Email : slm_sdccbslm@yahoo.co.in & devtsdccb@gmail.com
Website : www.salemdccbank.com

**தமிழ்நாடு அரசிடம் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறந்த சேவை புரிந்ததற்காக 8 முறை விருது பெற்ற வங்கி**

**அகில இந்திய அளவில் சிறந்த வங்கிக்கான விருது பெற்ற வங்கி இட்டுவைப்புகளுக்கு அதிக வட்டி விகிதம்**

**8.00%***

**ரூ.50.00 இலட்சம் மற்றும் அதற்கு மேல் இட்டுவைப்பு தொகைக்கு சிறப்பு வட்டி விகிதம்**

**8.25%***

**வங்கியின் மூலம் வழங்கப்பட்டு வரும் கடன்களின் விபரம்**

- நகைக்கடன்
- வீட்டு வசதிகடன், வீடு அடமான கடன்
- சம்பளக்கடன், பணிபுரியும் மகளிர்
- ஆடவர் / மகளிர் சிறுவணிகக்கடன்
- கைம்பெண் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன்
- மாற்றுத்திறனாளி கடன், மாற்று பாலினத்தவருக்கான வணிக கடன்)
- கைம்பெண் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன்
- மாற்றுத்திறனாளி கடன், மாற்று பாலினத்தவருக்கான கடன்
- நுகர்பொருள் கடன், வாகன கடன்
- மகளிர் தொழில் முனைவோர் கடன்
- சுய உதவிக்குழு கடன், கூட்டுப்பொறுப்பு குழு கடன்
- வீட்டு மனை (Plot) வாங்க கடன், வாங்கிய மனையில் வீடு கட்ட கடன்
- நாட்டுப்புற கலைஞர்கள் மற்றும் கலைபொருட்கள் தயாரிக்கும் பணியில் உள்ளவர்களுக்கு கடன் (Folk Artist & Artisans)
- கல்விக்கடன் (Education Loan), உணவு பதப்படுத்தும் காரியத்திற்கு கடன் (PMFME), MSME கடன்
- டாம்கோ கடன், டாப்செட்கோ கடன்
- கலைஞரின் கனவு இல்லம், மறு அடமானக் கடன் (மூத்தகுடிமக்கள்)
- சூரிய ஒளி ஆற்றல் மூலம் மின்உற்பத்தி சாதனம் நிறுவ கடன் (Solar Panel)
- RTGS, NEFT மற்றும் Mobile Banking, Gpay, Phoepee, UPI, வசதிகள்

**தங்களது தேவைகளுக்கு அருகில் உள்ள சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைமையகம் மற்றும் கிளைகளை அணுகவும்**

கூடுதல் பதிவாளர்/மேலாண்மை இயக்குநர்



# இன்று ஒரு தகவல்

# மாறுபடும் அறிவுரைகள்!

கங்கைக்கரை தோட்டம் ஆசிரமம். அங்கே பக்கத்திலே ஓர் ஒரு பெரியவர் தங்கியிருந்தார். அவர் – இராமகிருஷ்ண பரமஹம்ஸர். அந்த ஆசிரமம் இருந்த இடம் – கரக்பூர்.

வங்காளத்திலே பொதுவா எல்லாருமே மீன் சாப்பிடுறது உண்டு. கங்கையிலே குளிச்சுட்டு கையிலே ஒரு மீனோட வருவது வழக்கம்.

இவர் இருக்கிற இடத்துக்கு கங்கையிலே படகு வழியா வரணும். அப்படித்தான் எல்லாரும் வருவாங்க. வர்றவங்களை ஒன்றுகூட்டி ஆன்மிக விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்.

ஒவ்வொரு நாள் ஒவ்வொருத்தர் நகரத்துக்குப் போகணும்... வரும்போது மீன் கொண்டு வரணும். அதுக்காக ஆசிரமத்திலே! ஓர் அட்டவணையே உண்டு.

அது பிரகாரம் ஒரு நாள் சுவாமி யோகானந்தர் படகிலே போனார். படகை செலுத்தினவங்க. இராமகிருஷ்ணரையும் சுவாமி யோகானந்தரையும் மற்றவர்களையும் மித்தர்கள்–ன்னு சொல்லி ஏளனமா பேசினாங்க...

சுவாமி யோகானந்தருக்கு ரொம் மென்மையான இதயம் ... இவங்க இப்பட கன்னாபின்னான்னு பேசறதைப் பார்த்தா மீனை வாங்கிக்கிட்டுத் திரும்பறப்போ என்ன நடக்குமோன்னு பயந்தார்.

இதைத் தெரிந்து கொண்ட இராமகிருஷ்ணர்...

"யோகானந்தா இங்கே வா!'ன்னு கூப்பிட்டார். இவரு கண்ணீரைத் துடைச்சிக்கிட்டே கிட்டே வந்தார். சொன்னார்:

ஐயா... படகு ஓட்டறவங்க உங்களைபத்தி மோசமர பேசுறாங்க... என்னை திட்டினா பரவாயில்லை... ஆனா, உங்களை அவங்க திட்டறாங்க. அதை என்னாலே தாங்க முடியவில்லை!" ன்னார்.

இதைக் கேட்டதும் இராம கிருஷ்ணருக்குக் கோபம் வந்துட்டுது.

""என்னது... உன்னுடைய குருவைப் பத்தி அவங்க மோசமா

பேசும்போது நீ சும்மா இருந்தியா? வெளியே போ!" –ன்னார்.

"குரு நிந்தனை செய்யறப்போ அதைக் கேட்டுக்கிட்டு சும்மா இருக்கலாமா? குரு நிந்தையைக் கேட்டால் பாவமில்லையா? என்னைத் தூற்றும் போது அவர்கள் பாவம் செய்கிறார்கள். அதைக் கேட்டுக்கிட்டு நீ சும்மா இருந்ததால் நீயும் பாவம் செய்தாய்!" – அப்படின்னார்.

அடுத்த நாள் சுவாமி நிரஞ்சனானந்தர் போகவேண்டிய நாள். இவர் படகுலே போகும்போதும் அவங்க மோசமா பேசினாங்க... ஏசினாங்க!

அப்படி கேலி பண்ணின ஒருத்தனை இவர் பளார்ன்னு கன்னத்திலே அறைஞ்சுட்டார். இன்னொருத்தனை கங்கையிலே தூக்கி எறியறதுக்கும் தயாராயிட்டார்.

அதுக்கப்புறம் அவங்க யாரும் வாயைத் திறக்கலே! மீன் வாங்கிக்கிட்டு வர்றப்போவும் ஒரே அமைதி அவ்வளவு பயம் அவங்களுக்கு!

இராமகிருஷ்ணர் கூப்பிட்டு விசாரிச்சார் ' என்ன நடந்தது?'–ன்னு இவர் சொன்னார்.

அவர் யோகானந்தா போகும்போது என்ன நடத்துதோ.. அப்படியே தான் இப்பவும் நடந்துது. குரு நிந்தனை செய்யறதைக் கேட்டுக்கிட்டு நான் சும்மா இருப்பேனா? ஒருத்தனை தண்டிச்சேன், இன்னொருத்தனை " ஆற்றிலே தூக்கிப் போட்டு விடுவேன்!–னு பயமுறுத்தினேன்!" அப்படின்னார்.

இராமகிருஷ்ணருக்குக் கோபம் இப்பவும் வந்துட்டுதாம்!

"என்ன இது... அணியறது காஷாயம்... இருக்கிறது ஆசிரமம்... உனக்கு இவ்வளவு கோபம் வந்துதுன்னா அப்புறம் என்னத்துக்கு



ஆசிரமத்திலே இருக்கணும்? பிரம்மசாரி எப்பவும் அமைதியா இருக்கணும்!' –ன்னு அறிவுரை சொன்னார் இராமகிருஷ்ணர்.

இப்ப இவர் கேட்டார்: அவருக்கு ஒருவிதமாக அறிவுரை சொன்னீங்க... எனக்கு வேறே விதமாக அறிவுரை சொல்றீங்க! இதுலே எது உண்மை?" ன்னார். இதுக்கு இராமகிருஷ்ணர் சொன்னார்.

"அட அசடே! சக்கரத்திலே காற்று அதிகமா இருந்தா குறைக்கணும். குறைவா இருந்தா கூட்டணும். அவன் சாது.அவனுக்கு அதிக உணர்ச்சி தேவை. உனக்குப் படபடப்பு அதிகம். உனக்குப் பொறுமை தேவை!" அப்படின்னார்.

இதிலே உள்ள கருத்து என்ன தெரிமா? கல்விங்கறது எப்படினா.... அதை சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரி கற்பிக்கணும் எல்லாருக்கும் ஒரேமாதிரி கற்பிக்கக்கூடாது. கேட்கிறவர் தகுதி – புரிந்து கொள்கிற திறமை – இதைப் பொறுத்து கல்வி அமையணும்!

இந்தக் காலத்திலே ஒரு குரு... ஒரு சீடன்.. ஒரு ஆசிரமம். ஒரு நாள் ஒருத்தன் அவசரமா அந்த குருவைத் தேடி ஓடிவந்தான். என்ன விஷயம்–ன்னு விசாரித்தார் அந்த குரு.

"உங்க சிடர்என்னை அடிச்சுட்டார்!" ன்னு புகார் பண்ணினான் அந்த ஆள், குரு சீடனை கூப்பிட்டார்.

"அடிச்சியா இந்த ஆளை!" ன்னு கேட்டார்.

"ஆமாம்!" –ன்னான் சீடன்.

"ஏன் அடிச்சே?" –ன்னு கேட்டார்.

"இந்த ஆள் உங்களைப் பத்தி மட்டமா பேசிட்டான்! என்னாலே அதை தாங்கிக்கமுடியலை, அதான் அடிச்சுட்டேன்!" –னான்.

"அப்படி என்ன பேசினான்?"–னு கேட்டார்.

"உன் குருநாதர் இப்பல்லாம் அர்த்தமில்லாமே பேச ஆரம்பித்துவிட்டார் –ன்னு சொல்லிட்டாள். அதான் அடிச்சுட்டேன்!" –னான்.

"அதுக்காகவா அடிச்சே?"–ன்னார் குரு.

"நான் அதுக்காக அடிக்கலை... இப்பல்லாம் நீங்க அர்த்தமில்லாமே பேசறதா அவன் சொன்னான். அப்படின்னா இதுவரைக்கும் நீங்க அர்த்தத்தோட பேசினதாக அர்த்தமாச்சே... அது தப்புதானே அதனாலே தான் அடிச்சேன்!" அப்படின்னான் சீடன்!

*****







மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்ட அரங்கில் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மா.சௌ.சங்கீதா இ.ஆ.ப அவர்களின் தலைமையில் மதுரை மாவட்ட கூட்டுறவுத்துறையின் கீழ் தொடங்கப்படவுள்ள முதல்வர் மருந்தகங்கள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் 14.02.2025 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், மதுரை மண்டல இணைப்பதியாளர் திரு.சு.சதீஷ்குமார் அவர்கள், மதுரை மாவட்ட பாண்டியன் நுகர்வோர் மொத்த விற்பனை பண்டகசாலையின் இணைப்பதிவாளர்/மேலாண்மை இயக்குனர் திரு.சு.மனோகரன், துணைப்பதிவாளர்கள், கூட்டுறவு சார்பதிவாளர்கள், சங்க செயலாளர்கள் மற்றும் மருந்தாளுநர்கள் கலந்து கொண்டனர்.

# கேட்டதெல்லாம் கொடுக்கும் மரம்

கேட்டதெல்லாம் கொடுக்கும் மரம்.அல்லது அதனடியில் நின்று நினைத்தாலே கொடுக்கும் மரம் என்பார்கள். ஆனால் நாமெல்லாம் நிஜவாழ்வில் காண்கும் கற்பக மரம் என்பது பனைமரமே!

பொது வழக்கில் மரம் என்று தமிழில் வழங்கப்படினும், இது மர வகையைச் சார்ந்தது அல்ல. தற்காலத் தாவரவியல் அடிப்படையில் மட்டுமன்றித் தமிழ் இலக்கண மரபுகளின்படியும் பனையை மரம் என்பது தவறு.

நெடிய மரமாக 30 மீட்டர் உயரம் வரை பனை மரம் வளரும். இலைகள் நீட்டமாக விசிறி போல் இருக்கும். இலைகள் 2–3 மீட்டர் நீளம் இருக்கும். பூக்கள் சிறியவை. பழங்கள் (நுங்கு) பெரியதாக, வட்டமாக, பழுப்பு நிறத்துடன் இருக்கும்.



பனையை, கேட்டதைக் கொடுக்கும் தேவலோகத்து மரம் எனத் தொன்மங்கள் கூறும் கற்பகதருவுக்கு ஒப்பிடுவர்.

பனை மரத்தில் இருந்து கிடைக்கும் நுங்கு நீரை தொடர்ந்து சாப்பிட்டு வர கோடை காலத்தில் ஏற்படும் வேர்குரு நீங்கும்.

தோலுடன் நுங்கை சாப்பிட்டு வர சீதக்கழிச்சல் நீங்கும்.

பனங்கற்கன்டை ஏதாவது ஒரு வகையில் அடிக்கடி பயன் படுத்தி வர அம்மை நோயால் ஏற்பட்ட உடல் வெப்பம் தாகம் போன்றவை நீங்கும்.

பனங்கிழங்கிற்கு உடல் குளிர்ச்சியை தரும் தன்மை உண்டு. இந்த கிழங்கை சாப்பிட்டு வந்தால் உடல் அழகு பெறும். உடல் பலமும் அதிகரிக்கும்.

**பதநீர்** : பனை மரத்தில் நுங்கு பிஞ்சு உருவானதும், அதை நாறைக் கட்டி, வளர்ச்சியை கட்டுப்படுத்த பிஞ்சு ஓரத்தில் லேசாக கீறிவிட்டு, தினமும் மூன்று முறை மரம் ஏறி, அந்த பிஞ்சை அழுத்த, சொட்டுச் சொட்டாக மண்பானையில் பால்(கள்) இறங்கும். இப்படி ஒரு மரத்தில் மூன்று மாதம் வரை பால் எடுக்கலாம். அந்த பாலில் சுண்ணாம்பு சேர்த்தால் பதநீர் ரெடி. சில இடங்களில் மண்பானை அடியில் சுண்ணாம்பை தடவி கட்டிவிடுவார்கள். இதனால் மரத்திலிருந்து பானையை இறக்கும்போதே பதநீர் தயாராக இருக்கும். இந்த பதநீரில் சோறு சமைக்கலாம்; பொங்கல் வைக்கலாம்; கொழுக்கட்டை தயாரிக்கலாம்; அவியல் அரிசி படைக்கலாம். பிஞ்சிலிருந்து மரமாகி, கீழே விழும் வரை எல்லா வகையிலும் பயன்தரும் என்பது நிதர்சனம்.

மேக நோய் இருப்பவர்கள் பதநீரை 40 நாட்களிடைவிடாது அருந்தி வர அந்த நோய் பாதிப்பில் இருந்து விடுபடலாம்.பதநீரில் இருந்து எடுக்கப்படும் கருப்பட்டி, பனங்கற்கண்டு, ஆகியவற்றுக்கும் நோய் தீர்கும் குணங்கள் உண்டு.

**பனை நுங்கு** கோடை காலத்தில் ஏற்படும் தாகத்திற்கு மிகவும் ஏற்றது.

**பனங்கிழங்கை** உலர்த்தி இடித்து மாவாக்கி, அதனுடன் தேங்காய் உப்பு போட்டு சாப்பிட்டு வர உடலுக்கு பலம் உண்டாகும். மேலும் உடல் பருமன் ஆகும்.

**பனம் பூவை** சுட்டு சாம்பலாக்கி அதில் சிறிது தேங்காய் எண்ணெய் கலந்து புண்களின் மீது பூச ஆறும்.

**பயன் தரும் பாகங்கள்**

நொங்கு, பனம்பழம், பனங்கிழங்கு, பனை ஓலை, குருத்து, பனை கருக்கு, பனைப்பால், முற்றிய மரம் முதலியன.

**மருத்துவப் பயன்கள்**

- புளிப்பேறிய கள் மயக்கம் தரும், அறிவை மயக்கும் ஆனால் உடல் நலத்தைக் கொடுக்கும். சுண்ணாம்பு சேர்த்த தெளிவு எல்லோருக்கும் சிறந்த சுவையான சத்தான குடிநீராகும். அதைக் காய்ச்சினால் இனிப்பான கருப்பட்டி கிடைக்கும்.
- நுங்கு வெயிலின் கொடுமையைக் குறைக்க மனிதனுக்குக் கிடைத்த அரு மருந்தாகும். எல்லா வயதினருக்கும் ஏற்ற சிறந்த சத்துணவாகும். நுங்கின் நீர் வேர்க்குருவிற்குத் தடவ குணமாகும்.
- பனம்பழம் சிறந்த சத்துணவாகும். உயிர் சத்து நிறைந்தது. பித்தம் தருவது. சுட்டு சாப்பிடலாம்.

- பனங்கொட்டையை மிருதுவான மண் அல்லது ஈர மணலில் புதைத்து வைத்து இரண்டு மூன்று இலை விட்ட பின் தோண்டி கொட்டைக்குக் கீழ் உள்ள நீண்ட கிழங்கை எடுத்து வேக வைத்துச் சாப்பிட்டால் மிகச் சிறந்த ஊட்ட உணவாகும். சிறு குழந்தைகளுக்கு உடலைத் தேற்றும்.
- பனை மரத்தின் அடி பாகத்தில் கொட்டினால் நீர் வரும் அதை கருப்படை, தடிப்பு, ஊரல், சொறி உள்ளவர்களுக்கு அதன் மீது தடவினால் குணமடையும். ஐந்தாறு முறை தடவ வேண்டும்.
- பனையோலை வேய்த இருப்பிடம் ஆரோக்கிய வாழ்வைத் தரும். வெப்பம் அண்டாது. இதில் விசிறி, தொப்பி, குடை, ஓலைச்சுவடி தயார் செய்யப் பயன் படும். கைவினைப் பொருள்கள் செய்யலாம். இந்தோனேசியாவில் ஓலையை எழுதும் பேப்பராகப் பயன்படுத்தினார்கள். அதைப்பக்குவப்படுத்த கொதிநீரில் வேக வைத்து மஞ்சள் பொடி இட்டு ஓரத்தில் ஓட்டைகள் போட்டு ஏட்டுப் புத்தகம் உண்டாக்கினார்கள்.
- கண்ணில் புண் ஆனால் பனை குருத்து மட்டையைத் தட்டிப் பிழிந்த சாறு மூன்று நாள் விட குணமடையும் எரிச்சில் தீரும்.
- அடிப்பனை வெட்டிசோறு செய்தார்கள். பனங்கையில் பிரஸ் செய்தனர். கயிறுகள் தயார் செய்தனர். வேலிக்கும் பயன் படுத்தினர். பனையின் எல்லாபாகமும் உபயோகப் படுத்தினார்கள்.
- பனை வெல்லம், பனங்கற்கண்டு வாத பித்தம் நீங்கும். பசியை தூண்டும். புஷ்டி தரும். முன்பு சொன்னபடி, நுரையீரல் மற்றும் தொண்டை பாதிப்புகளுக்கு கொடுக்கப்படும் ஆயுர்வேத மருந்துகளில் பனைவெல்லம் சேர்க்கப்படுகிறது.
- எலிகளை வைத்து நடத்திய பரிசோதனையில் பனைவெல்லம், நிலக்கரி மற்றும் ஸிலிகா தூசிகளால் ஏற்படும் நுரையீரல் பாதிப்பை குறைக்கும் என்பது தெரிய வந்துள்ளது.
- வெல்லம் அயன்சத்து மிகுந்தது. சோகை நோய்களுக்கு மருந்து. தமிழகத்தில் பனை மரத்தின் வெல்லத்தை இரண்டு வகையாக சொல்வார்கள். முற்றிலும் சுத்தப்படுத்தாத, கெட்டியான கரு நிற வெல்லத்தை "கருப்பட்டி" என்பார்கள். இதை சுத்தப்படுத்தப்பட்ட படிகங்களாக உருவாகும் சர்க்கரை 'பனங்கற்கண்டு' எனப்படும் இதற்கு மருத்துவ குணங்கள் உள்ளன.
- பாலில் பனங்கற்கண்டை சேர்த்து காய்ச்சி குடித்தால் மார்புச்சளி இளகும். முக்கியமாக தொண்டைப்புண், வலி இவை அகலும்.

சங்கீத வித்வான்கள் எப்போதும் பனங்கற்கண்டு கலந்து காய்ச்சிய பாலையே அருந்துவது வழக்கம். அதனால் அவர்களின் குரல் வளம் குறையாமல், பாதுகாக்கப்படுகிறது. கூடவே சில மூலிகைகளும் சேர்க்கப்படுவது உண்டு.

- தவிர பனங்கற்கண்டு, உடல் உஷ்ணம், காங்கை, நீர் சுருக்கு, ஜுர வெப்பங்கள் இவற்றுக்கு நல்லது. பனை மரத்தில் இருந்து கிடைக்கும் பதநீர் பலவிதமான நோய்களை தீர்க்கும் மருந்தாக உள்ளது. பனை நீரிலுள்ள சீனி சத்து உடலுக்கு தேவையான வெப்பத்தை தருகிறது. இதிலிருக்கும் குளுக்கோஸ் மெலிந்து தேய்ந்து வாடிய உடலுடைய குழந்தைகளின் உடலை சீராக்கி நல்ல புஷ்டியை தருகிறது.
- கருவுற்ற பெண்களுக்கும் மகப்பேறு பெண்களுக்கும் ஏற்படுகின்ற மலச்சிக்கல், வயிற்றுப் புண் முதலியவைகளை குணப்படுத்துகிறது. இரத்த அழுத்தத்தை சீராக்குகிறது. டைபாய்டு, சுரம், நீர்க்கட்டு முதலிய வியாதிகளை போக்குகின்ற நல்ல மருந்தாகவும் இது செயல்படுகிறது.
- இதை அருந்துவதால் இருதய நோய் குணமாகும். இருதயம் வலுவடையும். இதிலிருக்கும் கால்சியம் பற்களை உறுதிப்படுத்தி, ஈறுகளில் ரத்தக்கசிவு ஏற்படுவதை தடுப்பதோடு பற்களின் பழுப்பு நிறத்தையும் மாற்றுகிறது.
- இதிலிருக்கும் இரும்புச்சத்து பித்தத்தை நீக்கி சொறி, சிரங்கு உள்பட சகல தோல் வியாதிகளையும் நீக்குவதுடன் கண் நோய், ஜலதோசம், காசநோய் இவைகளையும் நீக்குகிறது.
- மேலும் பதநீரானது சயரோகம், இரத்தக்கடுப்பு, அதிக உஷ்ணம், பசியின்மை, வயிற்றுப்புண், வாய்வு சம்பந்தமான நோய்களையும் குணப்படுத்துகிறது.

இப்படி எண்ணற்ற சிறப்புகளை நமக்கு மட்டுமல்லாது நம்மைச் சுற்றி வாழ்கின்றப் பல உயிரினங்களுக்கு வாழ்வாதாரமாக விளங்கும் பனையைக் காப்போம்! ❑

*நன்றி: முகநூல் இணையதளம்*

கூட்டுறவு இதழுக்கு எழுத்தோவியங்களை அனுப்புவோர் அஞ்சல் / மின்னஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும். வெளியிடப்படாத எழுத்தோவியங்களை திரும்ப அனுப்ப இயலாது. கூட்டுறவு இதழில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் மற்றும் துணுக்குகளில் தெரிவிக்கப்படும் கருத்துகள் எழுதுபவரின் கருத்தாகும்.

– ஆசிரியர்

Printed at Central Cooperative Printing Works Limited, 83/95 Anna Salai, Chennai - 600 002 and Published by Tamilnadu Cooperative Union from 170, Periyar E.V.R. High Road, Kilpauk, Chennai - 600 010. Editor: Dr.K.C.Ravichandran, Additional Registrar / Managing Director, Tamilnadu Coop. Union from 170, Periyar E.V.R. High Road, Kilpauk, Chennai-600 010.


கூட்டுறவே !
புதியதோர் உலகம் செய்வோம் !
நாட்டுயர்வு !
89
ஆண்டுகளாக
திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்
திருச்செங்கோடு-637 211.
வேளாண் பெருமக்களுக்கான
சேவைகள்
பருத்தி ஏலம், கொங்கணாபுரம் கிளை
மஞ்சள் ஏலம், திருச்செங்கோடு.
தேங்காய் பருப்பு ஏலம்,
மல்லசமுத்திரம் கிளை
விவசாய விளைபொருட்கள் ஏல விற்பனை விபரம்
திருச்செங்கோடு
பருத்தி, எள், நிலக்கடலை — செவ்வாய்
தேங்காய் பருப்பு — வெள்ளி
மஞ்சள் — சனி
கொங்கணாபுரம்
பருத்தி, எள் — சனி
நிலக்கடலை — ஞாயிறு, திங்கள், புதன்
மல்லசமுத்திரம்
பருத்தி — புதன்
நிலக்கடலை, மக்காச்சோளம் — திங்கள், வெள்ளி
தேங்காய் பருப்பு — வெள்ளி
ஜலகண்டாபுரம்
தேங்காய் பருப்பு — செவ்வாய்
இதர சேவைகள்
சங்கத்தின் சொந்த தயாரிப்புகள்
எண்ணெய் உற்பத்தி ஆலை
மஞ்சள் அரவை இயந்திரம்
அம்மா மருந்தகம்
நகைக்கடன் 9.25%
தானியங்கி உறையிடும் இயந்திரம்
Indane
Auto LPG
சர்வோ ஆயில் பிரிவு சேலம்
விதைகள், உரங்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் விற்பனை
உயர்தரமான டாடா டிஸ்கான், JSW கம்பிகள் விற்பனை
தலைமையகம் திருச்செங்கோடு : 04288 - 252359, 250511
கொங்கணாபுரம் கிளை : 04283 - 265540, 265652
மல்லசமுத்திரம் கிளை : 04288 - 238425 சேலம் சர்வோ : 0427 - 2352323
என்றென்றும்
மக்கள் சேவையில் உங்கள் TCMS
Email : tcmstcd@gmail.com

Date of Publication: First Week of Every Month
Registered Newspaper in India No.1103/57

